[10th March 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கலெக்டர் அவர்கள் முதலாவது ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். பின்னால் கலெக்டர் அவர்களே ஸ்டேயை வெக்கேட் செய்திருக்கிறார்கள். அதன் பின்னால்தான் சர்க்கார் ஸ்டே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருப்பார்கள். அப்படி அவர்கள் கேட்டபோது, கலெக்டர் அவர்கள் போட்டிருந்த ஸ்டே-யைப்பற்றியும், பின்னால் அவர்கள் வெக்கேட் செய்ததைப்பற்றியும் பரிசீலனை செய்ததா ? அப்படிப் பரிசீலனை செய்திருந்தால் இப்போது ரிப்போர்ட் ஏன் கேட்டிருக்க வேண்டும் ? கலெக்டர் தவறு செய்திருப்பார் என்று எண்ணியிருந்தால், அவ்விதம் செய்த தவறு என்ன ? தவறு ஒன்றும் இல்லையென்றால் கலெக்டர் அவர்களின் ஸ்டே-யைப்பற்றி ஏன் பரிசீலனை செய்ய வில்லை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பொதுவாக கலெக்டர் ஸ்டே கொடுக்கலாம். அதைப்பற்றி இங்கு வந்து மனுக் கொடுப்பவர்கள், தங்கள் மனுவில் குறிப்பிடுவதில்லை. இந்த மனுவின் மீது அரசாங்கம் ஸ்டே வழங்குகின்றது. ஆகவே, கலெக்டர் அவர்கள் கொடுத்த ஸ்டே-யைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்குத் தேவை ஏற்படுவதில்லை.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு வீட்டுவசதி

* 235 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள மானேஜர், ஹெட் கிளார்க் போன்றவர்கட்குக் குடியிருப்பு வீடுகள் கட்டும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியும் சில விஸ்தரிப்பு அலுவலர்களுக்கே போதுமான வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மேலாளர்கள்—ஹெட் கிளார்க் போன்றவர்கள்—மிகவும் முக்கியமானவர்கள் ; அடிக்கடி தேவைப்படக் கூடியவர்கள். இவர்களுக்கு அதிகாரிகளின் அருகில் வீடு இருத்தல் அவசியம். மேலும் கிராமங்களில் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் சேர்ந்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த மாதிரி உத்தேசம் சர்க்காருக்கு இப்போது இல்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, அம்மாதிரி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இல்லை என்றாலும், தாலூகா தலைநகரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்தால் அரசாங்கம் அவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கிறது. வேறு இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்தால் அவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. ஆனால்

10th March 1966]

நகரப் பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்துள்ள இடங்களில் உள்ள பணியாளர்களுக்கும் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்தக் கேள்வியிலிருந்து இந்த உபகேள்வி எழாது.

சிதம்பரம் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகள்

* 236 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலுகாவில் இருக்கும் பஞ்சாயத்துகள் எத்தனை ?

(இ) அந்தப் பஞ்சாயத்துகளில் பிரசிடெண்டாக அங்கம் வகிக்கும் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) 261.

(*b*) 46.

Evening classes for Law Course

* 237 *Q.*—SRI S. NANJUNDA ROW : } SRI M. KARUNANITHI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to conduct evening classes in the Madras Law College for Law Degree Course, for the benefit of the Government servants and others; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is proposed to start the course with effect from 1966–67.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரியில் சட்டப் படிப்பு படித்து, பட்டம் பெற நிர்ணயித்துள்ள கால அளவு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓராண்டு அதிகமாக இருக்கும். கல்லூரியில் சேர்ந்து படிக்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற வேண்டியிருக்கிறதோ அதைவிட ஓர் ஆண்டு அதிகமாக இருக்கும்.

SRI S. NANJUNDA ROW : Will the Government impress upon the new Madurai University to start evening colleges for Law in Madurai District ?